# செய்தி வெளியீடு

## அகில இந்தியக் குடிமைப் பணித் தேர்வுப் பயிற்சி மையத்தில் குடிமைப் பணிகளுக்கான முதன்மைத் தேர்வுக்கான பயிற்சி

அகில இந்திய குடிமைப்பணித் தேர்வுப் பயிற்சி மையத்தில், ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் குடிமைப்பணி முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சிப் பெற்றுள்ள 225 ஆர்வலர்களுக்கு ஜுன் 2026 முதல் ஆகஸ்டு 2026 வரை மூன்று மாதங்களுக்கு முதன்மைத் தேர்வுப் பயிற்சி வழங்கப்பட உள்ளது. இப்பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்ற ஆர்வலர்கள் மட்டுமின்றி, குடிமைப்பணி முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சிப் பெற்ற தமிழ்நாட்டைச் சார்ந்த இதர ஆர்வலர்களும் இப்பயிற்சி மையத்தில் சேர்ந்து பயிற்சி பெறலாம். பயிற்சி பெறக்கூடிய மூன்று மாத காலத்திற்கும் சேர்த்து ஊக்கத் தொகையாக ரூ.9,000/– வழங்கப்படும்.

இப்பயிற்சி மையத்தில் சேர விரும்பும் ஆர்வலர்கள் 17.06.2026 காலை 6.00 மணி முதல் 18.06.2026 மாலை 6.00 வரை www.civilservicecoaching.com என்ற இணையதளத்தில் தங்களது விவரங்களை பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இட ஒதுக்கீட்டின்படி தெரிவு செய்யப்பட்ட ஆர்வலர்களின் விவரம் 18.06.2026 இரவு 9.00 மணிக்கு இணையதளத்தில் வெளியிடப்பட்டு 20.06.2026 மற்றும் 21.06.2026 ஆகிய இரு நாட்களில் சேர்க்கை நடைபெறுவதோடு, 22.06.2026 முதல் முதன்மைத் தேர்விற்கான பயிற்சி வகுப்புகள் தொடங்கப்படும்.

மேலும், விண்ணப்பப் பதிவு/சேர்க்கைக்கு தேவையான ஆவணங்கள் மற்றும் விரிவான விவரங்கள் பயிற்சி மையத்தின் இணையதளத்தில் (www.civilservicecoaching.com) வெளியிடப்படும். மேலும் விவரங்களுக்கு 044–24621475 என்ற தொலைபேசி எண் வாயிலாகவும், 9345766957 என்ற புலன எண் (Whatsapp) மூலமாகவும், aicscc.gov@gmail.com என்ற மின்னஞ்சல் மூலமாகவும் தொடர்பு கொள்ளலாம்.

பயிற்சித் துறைத் தலைவர்

# அகில இந்திய குடிமைப்பணித் தேர்வுப் பயிற்சி மையம்

## முதன்மைத் தேர்வுப் பயிற்சி சேர்க்கைக்கான அறிவிப்பு–2026

அறிவிக்கை எண்:அ/740/2026 நாள்:16.06.2026

அகில இந்திய குடிமைப்பணித் தேர்வுப் பயிற்சி மையத்தில் 2026–ஆம் ஆண்டுக்கான ஒன்றிய தேர்வாணைய குடிமைப்பணிகளுக்கான முதன்மைத் தேர்வுப் பயிற்சிக்காக இட ஒதுக்கீட்டு விதிகளின் அடிப்படையில் 225 நபர்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர்.

**1.முக்கியமான நாள் மற்றும் நேரம்:**

| | | |
|---|---|---|
| 1 | இணைய வழி விண்ணப்பப் பதிவு துவங்கும் நாள் | 17.06.2026<br>(புதன் கிழமை)<br>(காலை 6 மணி முதல்) |
| 2 | இணைய வழி விண்ணப்பப் பதிவு முடிவடையும் நாள் | 18.06.2026<br>(வியாழக் கிழமை)<br>(மாலை 6 மணி வரை) |
| 3 | இடஒதுக்கீட்டின் படி தெரிவு செய்யப்பட்ட ஆர்வலர்களின் தெரிவுப் பட்டியல் வெளியீடு | 18.06.2026<br>(வியாழக் கிழமை)<br>(இரவு 9 மணி) |
| 4 | சான்றிதழ் சரிபார்ப்பு/சேர்க்கை/காப்புத் தொகை செலுத்துதல்<br>நடைபெறும் இடம்:<br>அகில இந்திய குடிமைப் பணித் தேர்வுப் பயிற்சி மையம், "காஞ்சி" பசுமைவழிச்சாலை, சென்னை–28. | 20.06.2026<br>(சனிக் கிழமை)<br>21.06.2026<br>(ஞாயிற்றுக் கிழமை) |
| 5 | முதன்மைத் தேர்விற்கானப் பயிற்சி வகுப்புகள் துவக்க நாள் | 22.06.2026<br>(திங்கட் கிழமை) |

**2.விண்ணப்பிக்கும் நடைமுறை:**

விண்ணப்பங்கள் இணைய வழி மூலம் மட்டும் வரவேற்கப்படுகின்றன. இணையவழி விண்ணப்பங்களை (www.civilservicecoaching.com) என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்.

**3.தேவையான சான்றிதழ்கள்:**

சான்றிதழ் சரிப்பார்ப்பிற்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்கள் சான்றிதழ் சரிப்பார்ப்பின் போது கீழ்க்காணும் மூலச் சான்றிதழ்களையும் (Original Certificates) அவற்றின் 1 நகலையும் (Xerox) கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும்.

1. விண்ணப்பம் (Application)
2. முதல்நிலைத் தேர்விற்கான நுழைவுச் சீட்டு (Hall Ticket)
3. பிறப்பிட சான்றிதழ் (Nativity Certificate)
4. வருமான சான்றிதழ் (Income Certificate)
5. சாதி சான்றிதழ் (Community Certificate)
6. அனைத்து கல்வி சான்றிதழ்கள் (SSLC, HSC, UG, PG Certificates)
7. மாற்று சான்றிதழ் (Transfer Certificate)
8. வங்கி கணக்கு புத்தகம் முதற்பக்கம் (Bank Passbook First Page)
9. ஆதார் (Aadhar Card)
10. Passport Size Photo– 3 & Stamp Size Photo– 2
11. மாற்றுத்திறனாளி சான்றிதழ் (DAP Certificate) (மாற்றுத்திறனாளி விண்ணப்பதாரர்கள் மட்டும்)
12. தடையின்மை சான்றிதழ் (No Objection Cerrificate) (அரசுப்பணியில் உள்ள விண்ணப்பதாரர்கள் மட்டும்)

மூலச் சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கு வரும்போது, தேவையான மூலச் சான்றிதழ்களில் ஒன்றையோ அல்லது அதற்கு மேற்பட்ட சான்றிதழ்களையோ சமர்ப்பிக்கத் தவறினால் மறுவாய்ப்பு அளிக்கப்பட மாட்டாது. மேலும், இட ஒதுக்கீட்டின் படி அடுத்த ஆர்வலருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**4.காப்புத்தொகை:**

| வகுப்பு (இனவாரியாக) | செலுத்த வேண்டிய காப்புத்தொகை (பயிற்சியின் நிறைவில் திரும்ப வழங்கப்படும்) |
|---|---|
| ஆதிதிராவிடர்/அருந்ததியர்/பழங்குடியினர்/மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்/பிற்படுத்தப்பட்டோர்/ பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லிம்)/ பொதுப்பிரிவினர் | ரூ.3000/– |

**5.நிபந்தனைகள்:**

(அ) தமிழ்நாட்டைச் சார்ந்த ஆர்வலர்கள் மட்டுமே பயிற்சிக்கு அனுமதிக்கப்படுவர்.

(ஆ) முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சிப் பெற்ற ஆர்வலர்கள் மட்டுமே முதன்மைத் தேர்வுப் பயிற்சிக்கு அனுமதிக்கப்படுவர்.

(இ) அரசு பணியில் உள்ளவர்கள் கட்டாயமாக தடையின்மை சான்றிதழ் (No Objection Cerrificate) சமர்ப்பிக்க வேண்டும்.

(ஈ) சான்றிதழ் சரிப்பார்ப்பிற்கு குறித்த நாள் மற்றும் நேரத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது. தவறும் பட்சத்தில் மறுவாய்ப்பு அளிக்கப்பட மாட்டாது. மேலும், இட ஒதுக்கீட்டின் படி அடுத்த ஆர்வலருக்கு முன்னுரிமை வழங்கப்படும். மின்னஞ்சல், தொலைபேசி மற்றும் இதர வழிகளில் சான்றிதழ் சரிப்பார்ப்பு நாள் மற்றும் நேரம் ஆகியவற்றை மாற்றக் கோரி வரும் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**6.பயிற்சி மையத்துடனான தகவல் தொடர்பு:**

மேலும் விவரங்களுக்கு, பின்வரும் வழிகளில் தொடர்பு கொள்ளலாம்.
தொலைபேசி: 044-24621475
புலன எண் (Whatsapp): 9345766957
மின்னஞ்சல்: aicscc.gov@gmail.com
அனைத்து வேலை நாட்களிலும் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை தொடர்பு கொள்ளலாம்.

ஒம்/-முதல்வர்
அகில இந்திய குடிமைப் பணித் தேர்வு பயிற்சி மையம்,
சென்னை-28.

# ALL INDIA CIVIL SERVICES COACHING CENTRE

## Admission Notification for UPSC Mains Coaching-2026

Notification No:A/740/2026 Date:16.06.2026

The All India Civil Services Coaching Centre proposes to select 225 candidates for the UPSC Civil Services Examination 2026 Main Examination Coaching Programme based on the prescribed reservation policy.

### 1.Important Dates and Time:

| | | |
|---|---|---|
| 1 | Commencement of Online Registration | 17.06.2026 (Wednesday) (From Morning 6 AM) |
| 2 | Last Date for Online Registration | 18.06.2026 (Thursday) (Till Evening 6 PM) |
| 3 | Publication of Selection List as per Reservation Policy | 18.06.2026 (Thursday) (Night 9.00 PM) |
| 4 | Certificate Verification/Admission/ Payment of Caution Deposit<br>Venue:<br>All India Civil Services Coaching Centre, "Kanchi" Campus, Greenways Road, Chennai–28. | 20.06.2026 (Saturday)<br>21.06.2026 (Sunday) |
| 5 | Commencement of Classes for Mains Coaching | 22.06.2026 (Monday) |

### 2.Application Procedure:

Applications are accepted only through online mode. Online applications can be submitted on the website (www.civilservicecoaching.com)

## 3.Required Documents:

Candidates who are called for certificate verification must submit the following original certificates along with one set of photocopies at the time of verification:

1. Application Form
2. UPSC Prelims Hall Ticket
3. Nativity Certificate
4. Income Certificate
5. Community Certificate
6. All Educational Certificates (SSLC, HSC, UG, PG Certificates)
7. Transfer Certificate
8. Bank Passbook-First Page
9. Aadhar Card
10. Passport Size Photo – 3 & Stamp Size Photo – 2
11. Disability Certificate (DAP Certificate) (For disabled candidates only)
12. No Objection Certificate (NOC) (for Government Servants only)

If any of the required original certificates are not submitted during the counselling and certificate verification, no second chance will be given. Additionally, priority will be given to the next candidate according to the reservation policy.

## 4.Caution Deposit:

| Category | Caution Deposit to be Paid (Refundable on Completion of the Coaching Programme) |
|---|---|
| Scheduled Castes/ Scheduled Castes (Arunthadhiyar)/ Scheduled Tribes/ Most Backward Classes and Denotified Community/ Backward Classes/ Backward Classes (Muslims)/ General Category | Rs.3000/- |

## 5.Terms and Conditions:

(a) Only candidates belonging to Tamil Nadu are eligible to undergo the coaching programme.

(b) Only candidates who have qualified in the UPSC Civil Services Preliminary Examination are eligible for admission to the Main Examination Coaching Programme.

(c) Candidates employed in Government Service must produce a valid No Objection Certificate (NOC).

(d) Candidates are instructed to attend certificate verification on the specified date and time without fail. No second opportunity will be provided for absentees. In such cases, priority will be given to the next eligible candidate as per the reservation policy. Requests for change of date or time of certificate verification received through email, telephone, or any other mode will not be entertained.

## 6.Contact Information for the Coaching Centre:

For more details, you can contact through the following:
Phone: 044-24621475
WhatsApp: 9345766957
Email: aicscc.gov@gmail.com
You can reach out on all working days from 10:00 AM to 5:45 PM.

Sd/-Principal (FAC)
All India Civil Services Coaching Centre,
Chennai-28.